**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 219/2016 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | **திருமதி. கீதா** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of April 2024.

நான் தற்போது நான்குநேரி காவல்நிலையத்தில் பெண் தலைமைக காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மூன்றடைப்பு காவல்நிலையத்தில் பணியிலிருந்த போது 11.04.2016 ஆம் தேதி 15.00 மணிக்கு நான் நிலையபொறுப்பில் இருக்கும் போது அ.சா.1 பரமசிவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 58/2016 இதச பிரிவுகள் 353, 294(பி), 506(2) என்ற வழக்கை பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் விஜய்சண்முகநாதன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு பதிவு செய்யும் போது நிலைய பொறுப்பு அதிகாரியாக நான் தான்

இருந்தேன். புகார் மனுவில் உள்ள விபரங்களை முதல்தகவல் அறிக்கையில் அப்படியே எழுதப்படும் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவில் எதிரியின் வயது குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 முதல்தகவல் அறிக்கையில் எதிரியின் வயது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதரிகளை காவல்நிலையம் அழைத்து வந்ததால் அவர்களை விசாரித்து வயதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

புலன் விசாரணை அதிகாரியுடன் நான் இவ்வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் செல்லவில்லை. காட்டப்படும் வரைபடத்தில் உள்ள எழுத்துகள் உங்களுடையது தான் என்றால் இல்லை. வரைபடத்தினை காவல்நிலையத்தில் யார் எழுதினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் சொன்ன நேரத்தில் இந்த வழக்கு பதிவு செய்யவில்லை என்றும், அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கிணங்க இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 219/2016 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | **திரு. முத்து தங்கவேல்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of April 2024.

**நான் தற்போது கீழஉப்பூரணியில் வசித்து வருகிறேன். நான் தனியார் வங்கியில் பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு நான்குநேரி சரக ஊர்காவல் படையில் பணியிலிருந்த போது 11/04/2016 ஆம் தேதி மதியம் 01.30 மணியளவில் நான், உதவி ஆய்வாளர் சுப்பிரமணியனும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் மருதகுளம் ஊருக்கு கீழ்புறம் உள்ள மாரியப்பன் மரக்கடைக்கு அருகே தேர்வு பணி முடித்து வாகன தணிக்கையில் இருந்தோம்.**

**நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியனும் பள்ளிக்கு வெளியே நின்றோம். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் மரக்கடை முன்பு வாகனதணிக்கையில் இருந்தார்கள். TN 72 AU 6318 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த யோவான் மற்றும் கிப்சன்டேனியல் ஆகியோர்களை அ.சா.1, 2 மறித்தார்கள். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் சத்தம் போட்டு கொண்டு வந்தார்கள் நாங்கள் அவர்களை மறித்து அவர்கள் விலாசத்தினை விசாரித்தோம்.**

**பின்னர் எதிரிகளை விசாரித்து அவதூறான வார்த்தையில் பேசி,**

வெட்டிவிடுவேன் என்று தெரிவித்ததால் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பின்னர் இது சம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் இருவரினையும் அ.சா.1, 2 மறித்த போது நிற்காமல் வேகமாக வந்தார்கள் என்றால் சரிதான். நீங்களும், உதவி ஆய்வாளர் சுப்பிரமணியனும் பள்ளி வாசலில் சம்பவம் நடக்கும் போது நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். அ.சா.1, 2 வாகன தணிக்கை செய்த இடத்திலிருந்து பள்ளிகூடம் மேல்பக்கத்தில் உள்ளது. வாகனதணிக்கை செய்த ரோடு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்.

நானும் உதவி ஆய்வாளரும் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அ.சா.1, 2 நிற்கும் இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அவர்கள் சத்தம் போட்டால் கேட்கும் தூரத்தில் நின்று கொண்டிருந்தோம். சம்பவ இடத்திலிருந்து எதிரிகளை உடனடியாக இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றோம். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு அரை மணிரேத்தில் சென்றிற்ப்பீற்கள் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றும் உதவி ஆய்வளார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீற்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 219/2016 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. ஜெபசிங் டேவிட் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of April 2024.

நான் தற்போது கீழஉப்பூரணியில் வசித்து வருகிறேன். நான் தனியாக வீட்டிலிருந்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான்குநேரி சரக ஊர்காவல்படையில் பணியிலிருந்த போது கடந்த 11.04.2016 ஆம் தேதி மதியம் 01.30 மணிக்கு நானும், பரமசிவன், எஸ்எஸ்ஐ சுப்பிரமணியன், முத்து தங்கவேல் ஆகியோர்கள் மருதகுளத்தில் சாலமோன் காம்பளக்ஸ் அருகில் வாகனதணிக்கையில் இருந்தோம்.

அப்போது TN 72 AU 6728 என்ற Honda Shine வாகனத்தில் கிப்சன் டேனியல், யோவான் இருவர் வந்தார்கள். நானும், அ.சா.1 ம் அவர்களை மறித்தோம். ஆனால், அவர்கள் எங்களை கெட்ட வார்த்தையில் பேசி நிற்காமல் எங்களை தாண்டி சென்றார்கள் பின்னர் எங்களுக்கு அடுத்து நின்று கொண்டிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் அவர்களை மறித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்.

பின்னர் மேற்படி எதிரிகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார்கள். மேற்படி எதிரிகள் அவதூறான வார்த்தையில் பேசி, பணி செய்யவிடாமல்

தடுத்ததால் சிறப்பு உதவி ஆய்வாளர் புகார் அளித்தார். என்னை விசாரணை செய்தார்களா என்று தற்போது ஞாபகமில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் வாகனதணிக்கைக்கு ரோட்டில் எந்தபுறம் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் தற்போது ஞாபகமில்லை. வாகனதணிக்கை செய்யும் இடம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். நாங்கள் நின்ற இடத்திற்கு பின்னால் சுமார் 10 லிருந்து 15 அடி தூரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் இருந்தார். சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரிகளை விசாரணை செய்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தினை நிறுத்தி பேசினார்களா, வண்டியிலிருந்து கொண்டே பேசினார்களா என்றால் சரியாக ஞாபகமில்லை.

உதவி ஆய்வாளர் எதிரிகளின் பெயர் விலாசம் கேட்டு எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். எதிரிகளை பிடித்து காவல்நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார்கள். எதிரிகளின் வாகனத்தினை நான் எடுத்து கொண்டு வந்தேன். எதிரிகளை போலிசார் அவர்களுடைய வாகனத்தில் வைத்து காவல்நிலையம் அழைத்து வந்தார்கள். புகார் மனுவினை சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் அளித்தார் என்றால் சரிதான்.

சம்பவ இடத்திலிருந்து 3/4 மணி நேரத்தில் காவல்நிலையத்திற்கு வந்துவிட்டோம். நான் ஊர்காவல் பணியில் தான் பணியிலிருந்தேன் என்று நிரூபணம் செய்யும் வகையில் எந்த ஆவணத்தினையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அடையாள அட்டை எதுவும் அளிக்கபடவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றும் உதவி ஆய்வளார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 219/2016 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. பரமசிவன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of April 2024.

நான் தற்போது நான்குநேரி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மூன்றடைப்பு காவல்நிலையத்தில் 2 ம் நிலை காவலராக பணியிலிருந்த போது கடந்த 11.04.2016 ஆம் தேதி மதியம் 13.30 மணிக்கு நானும், எஸ்எஸ்ஐ சுப்பிரமணியன், ஊர்காவல் படையை சார்ந்த ஜெபசிங் டேவிட்(562), முத்து தங்கவேல் (564) ஆகியோர்கள் மருதகுளம் ஊருக்கு கிழக்கு பக்கம் உள்ள சாலமோன் காம்பளக்ஸ் மாரியப்பன் மரக்கடை முன்பு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக TN 72 AU 6728 என்ற பதிவெண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனத்தில் சென்ற பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மருதகுளம் கிழ தெருவை சார்ந்த தேவசகாயம் மகன் யோவான் மற்றும் அதே தெருவினை சார்ந்த கோவில் பிச்சை மகன் கிப்சன் டேனியல் ஆகிய இருவரில் கிப்சன் டேனியல் என்பவர் வாகனத்தினை ஓட்ட, யோவான் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்தார்.

வாகன தணிக்கை செய்ய வாகனத்தினை மறித்த போது இருவரும்

அசிங்கமான வார்த்தையில் ஏசி, வண்டியை மறித்தால் கொலை செய்துவிடுவோம் என மிரட்டிவிட்டு வண்டியை நிறுத்தாமல் கிழக்கு பக்கமாக சென்றுவிட்டார்கள்.

அசிங்கமாக ஏசிய எனக்கு மானபங்கம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து, அரசு பணியினை செய்ய விடாமல் தடுத்த இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க மூன்றடைப்பு காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் வழக்கு சம்பவ நேரத்தில் அரசு பணியில் இருந்ததை நிரூபணம் செய்ய எந்த ஆவணத்தினை பார்த்தால் துலங்கும் என்றால் காவல்நிலைய பொதுநாட்குறிப்பை பார்த்தால் துலங்கும். வாகன தணிக்கையை உதவி ஆய்வாளர் தான் செய்ய வேண்டும் என்று காவல்துறை சுற்றறிக்கை உள்ளது என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களும் செய்யலாம்.

எதிரிகளின் பெயரினை பின்னால் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டிற்கள் என்றால் வாகன தணிக்கையின் போது நான் நின்று கொண்டிருந்த இடத்திருந்த இடத்திற்கு பின்புறம் 20 அடி தூரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியனும், முத்துவேலும் இருந்தார்கள். மேற்படி எதிரிகளின் பெயர்களை சிறப்பு உதவி ஆய்வாளரிடம் தெரிவித்ததாக சிறப்பு உதவி ஆய்வாளரிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேன்.

வாகன தணிக்கை செய்யும் போது தடுப்பு அரண்கள் அமைத்து தான் வாகன தணிக்கை செய்ய வேண்டுமென்று காவல்துறை சுற்றறிக்கை உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தின் போது வாகன தணிக்கையின் போது என்ன தடுப்பு அரண் வைத்திருந்தீற்கள் என்றால் எதுவும் வைக்கவில்லை. எதிரிகள் வாகனத்தினை நிறுத்தாமலே பேசினார்கள் நின்று பேசவில்லை. ஆனால் உங்களுக்கு பின்னால் நின்று கொண்டிருந்த சிறப்பு உதவி ஆய்வாளரிடம் நின்று பேசினார்களா நிற்காமல் பேசினார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

ஆனால் உங்களிடம் பேசுவதற்கு முன்பே சிறப்பு உதவி ஆய்வாளிடம் பேசவில்லை என்றால் சரிதான் என்னை தாண்டி தான் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் பேசினார்கள். எதிரிகளை சம்பவ காலத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். அரசு பணியிலிருக்கும் போது எதாவது சம்பவம் நடைபெற்றால் தனிஅறிக்கை

மூலமாக தான் தகவல் தெரிவிக்கவேண்டும் என்றால் புகார் போதும் என்று விசாரணை அதிகாரி தெரிவித்ததால் புகார் அளித்தேன்.

புகார் மனுவினை நான் தான் எழுதினேன். இவ்வழக்கு சம்பவத்திற்கு பிறகு சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திற்கள் என்றால் பின்னர் ஒரு மணிநேரத்திற்கு மேல் இருந்தேன். காவல்நிலையத்தில் புகார் மனுவினை நிலைய பொறுப்பிலிருந்த கீதா பெண் முதல் நிலை காவலரிடம் அளித்தேன். புகார் அளிக்கும் போது உதவி ஆய்வாளர் எங்கு இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திலிருந்து மூன்றடைப்பு பஜார் பணிக்கு சென்றுவிட்டு அதன்பின்பு தான் புகார் மனு அளித்தேன்.

மூன்றடைப்பு பஜாரிலிருந்து வாகன தணிக்கை தான் செய்து கொண்டிருந்தேன். நான் புகார் அளிக்கும் போது உதவி ஆய்வாளர் காவல்நிலையத்தில் இல்லை எங்கு இருந்தார் என்று ஞாபகமில்லை. புகார் அளித்த பின்பு பணியில் இருந்தேனா என்றால் ஞாபகமில்லை. நான் மாலை 06.30 மணிக்கு காவல்நிலையம் சென்ற போது உதவி ஆய்வாளர் இருந்தார். உதவி ஆய்வாளர் எப்போது விசாரணை செய்தார் என்று ஞாபகமில்லை.

நீங்கள் சொல்வது போல் எதிரிகள் வாகனத்தில் வந்ததாகவும், நாங்கள் மறித்த போது அவதுறான வார்த்தையில் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மற்றும் அவரது நண்பர் ஒருவருடன் குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்துவிட்டு பைக்கில் வரும் போது உதவி ஆய்வாளர் அவர்களை மறித்து ஓட்டுனர் உரிமத்தினை கேட்டார் என்றும் அப்போது அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் அதனை மனதில் வைத்து கொண்டு மறுநாள் உங்களிடம் புகாரை பெற்று கொண்டு எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் நேரத்தில் எந்த விதமான புகார் மனு அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**